# THE SYRO-MALANKARA CATHOLIC CHURCH

MORAN MOR BASELIOS CARDINAL CLEEMIS
MajorArchbishop-Catholicos

Major Archiepiscopal Curia
Catholicate Centre
Pattom, Trivandrum -695004

Prot No CCL 1/2025

10.01.2025

## <u>சுற்றறிக்கை</u>

## காதோலிக்கா தினம் - 2025

மேதகு ஆயர்களே, வணக்கத்திற்குரிய கோர் எப்பிஸ்கோப்பாமார்களே, றம்பான்மார்களே, மதிப்பிற்குரிய குருக்களே, திருத்தொண்டர்களே, இருபால் துறவிகளே, ஆண்டவரில் அன்பிற்குரிய இறைமக்களே!

அகில உலக திருச்சபையில் மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபை தன்னாட்சி அதிகாரமுள்ள உயர் பேராய திருச்சபையாக உயர்த்தப்பட்டு 20 ஆண்டுகள் நிறைவடைகிறது. இந்த தினத்தை காதோலிக்கா தினமாக 2025-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 2-ம் நாள் கொண்டாடுகிறோம். நமது திருச்சபையை பராமரித்து வழிநடத்தும் கடவுளின் கருணையை நினைத்து திருச்சபையாக இணைந்து நன்றி கூறுவோம். “விண்ணுலகில் இறைவனுக்கு நன்றி செலுத்துங்கள்; என்றும் உள்ளது அவரது பேரன்பு” (திபா 136:26). நமது திருச்சபையை கடவுளின் கரங்களில் ஒப்புக்கொடுத்து மன்றாட காதோலிக்கா தினத்தில் தனிக்கவனம் செலுத்துவோம். திருச்சபையின் திருப்பணிகள் அனைத்தும் சிறப்புற நடைபெற இறைவேண்டல் செய்வோம். நம்பிக்கையுடனும் அற்பண உள்ளத்துடனும் திருச்சபையின் திருப்பணிகளில் ஆர்வமுடனும் செபத்துடனும் செயல்பட உறுதியெடுப்போம். காதோலிக்கா தினத்தின் ஆசீர்களை திருச்சபை மக்களுக்கு கூறிக் கொள்கிறேன்.

“எங்கள் ஆண்டவராகிய இயேசு மெசியாவே தூய திருச்சபையில் அமைதியும் சமாதானமும் நிலவச் செய்தருளும். கலக்கங்களும் பிரிவுகளும் ஏற்படாமலிருக்க அதனை அன்புடன் பாதுகாப்பீராக. திருச்சபைக்கு சிலுவையின் நிழலில் அடைக்கலம் தந்தருள்வீராக. ஆசீர் மிக்க உமது திருக்கைகளால் அதனை ஆசீர்வதிப்பீராக. உமது திருமுகத்தைப் பார்ப்பதற்கு திருச்சபையின் கண்களுக்கு ஒளி தருவீராக” (கிரிதீபம்). நிரந்தரமாக திருச்சபைக்காக இறைவேண்டல் செய்த

வணக்கத்திற்குரிய மார் இவானியோஸ் ஆண்டகையின் செபமே இது. அவருடன் இணைந்து திருச்சபையை வலுப்படுத்த நாமும் இறைவேண்டல் செய்வோம். கடந்த ஆண்டில் இறையூழியர் மார் இவானியோஸ் ஆண்டகையை திருத்தந்தை பிரான்சிஸ் வணக்கத்திற்குரியவர் என்ற நிலைக்கு உயர்த்தினார். திருச்சபைக்கு வழங்கப்பட்ட இந்த ஆசீரை நினைத்து இறைவன்முன் தலைவணங்குவோம். நன்றி சொல்லுவோம். 1930-ல் நடந்த மறுவொன்றிப்பு, திருச்சபை சுய ஆட்சி அதிகாரமுள்ள உயர் பேராயத் திருச்சபையாக உருவாக்கம் பெற்றது, திருச்சபையின் தலைவர் உயர் பேராய காதோலிக்க பாவாவாக உயர்த்தப்பட்டது, அவருக்கு கர்தினால் பதவி கிடைத்தது, இவையாவற்றிலும் மார் இவானியோஸ் ஆண்டகையின் கனவுகள் நனவாயின.

ஏராளமானோரின் செபம், தியாகம் இவற்றின் விளைவே நமது திருச்சபையின் வளர்ச்சி. திருச்சபையின் திருத்தூதுப் பணிகளையும் சான்று வாழ்வையும் வலுப்படுத்திய பேராயர்கள், ஆயர்கள், குருக்கள், இருபால் துறவிகள், பொதுநிலையினர் அனைவரையும் நன்றியுடன் நினைவு கூர்வோம். இறைவனின் திருமுன் அவர்களை ஒப்புக்கொடுத்து மன்றாடுவோம். திருச்சபையின் திருப்பணிகளுக்காக தங்களை அற்பணம் செய்திருக்கும் ஆயர்களையும், குருக்களையும், இருபால் துறவிகளையும், இறைமக்கள் சமூகத்தையும் நன்றியுடன் நினைவு கூருகின்றேன்.

அகில உலகத் திருச்சபை 2025-ம் ஆண்டை யூபிலி ஆண்டாக கொண்டாடுகிறது. "எதிர்நோக்கு ஏமாற்றம் தராது" (உரோ 5:5) என்ற உறுதிப்பாட்டை யூபிலி ஆண்டு நமக்குத் தருகிறது. திருத்தந்தையின் இந்த அழைப்பை ஏற்றுக்கொள்வோம். "புனித ஆண்டில் எதிர்நோக்கின் திருப்பயணிகளாக பயணம் செய்வோம். இவ்வாறு நமது அழைப்பின் பொருளை அறிந்து தூய ஆவியின் வரங்களை பகிர்ந்து உலகில் கிறிஸ்துவின் கனவுகளை நனவாக்கி அவற்றிற்கு சாட்சிகளாக மாறுவோம். இறையன்பில் இணைந்து ஒரு குடும்பமாக உருவாக்கம் பெறுவோம்". எதிர்காலத்தைப் பற்றிய நிலையற்ற தன்மை சில வேளைகளில் முரண்பட்ட உணர்வுகள் வளர வழிவகுக்கலாம். இது உறுதியான நம்பிக்கையிலிருந்து அச்சத்தை நோக்கியதாகவோ நிறை அமைதியிலிருந்து கவலையை நோக்கியதாகவோ உறுதியான நம்பிக்கையிலிருந்து தயக்கத்தையும் சந்தேகத்தையும் நோக்கியதாகவோ இருக்கலாம். கிறிஸ்துவே நமது எதிர்நோக்கு. அவர் நம்மை ஏமாற்றத்தின்

வாழ்வுக்கு அல்ல மாறாக எதிர்நோக்கு வாழ்வுக்கு அழைக்கிறார். யூபிலி ஆண்டு நம் வாழ்வுக்கு எதிர்நோக்கு தருகின்ற புது தொடக்கத்தின் ஆண்டாக அமையட்டும்.

2030-ம் ஆண்டில் மறுவொன்றிப்பின் நூற்றாண்டு விழாவை கொண்டாட இருக்கின்றோம். 2024-ம் ஆண்டுமுதல் ஒவ்வொரு ஆண்டும் வேறுபட்ட மையசிந்தனைகளை தேர்ந்தெடுத்து திருச்சபையை புதிதாக்கம் செய்யும் முயற்சியில் நாம் அனைவரும் பங்கேற்கின்றோம். இதன் முதற்படியாக 2024 செப்டம்பர் 20 முதல் 2025 செப்டம்பர் 19 வரை இறைவார்த்தை ஆண்டு அனுசரிக்கப்படுகிறது. இறைவார்த்தை வாயிலாக திருச்சபையை கட்டியெழுப்பி ஆற்றல்படுத்த எல்லாம் வல்ல கடவுள் நமக்காக அருளிய அருளின் ஆண்டு இது. உயிரளிக்கும் இறைவார்த்தைக்கு நெருக்கமாவோம். அதனை கற்றறிவோம். அது வழியாக இறைவார்த்தைக்கு சான்று பகர அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றேன். இறைவார்த்தை ஆண்டின் சிறப்பு நிகழ்வுகளில் திருச்சபை மக்கள் ஆர்வமுடன் பங்கேற்க வழிவகை செய்ய வேண்டுமென்று நினைவூட்டுகிறேன்.

நமது திருச்சபையின் 29-ம் ஆயர் மாமன்றம் 2025 மார்ச் 10 முதல் 14 வரை காதோலிகேட் மையத்தில் நடைபெறும். ஆயர் மாமன்ற ஆலோசனைகள் ஆசீர்மிக்கதாக அமைய அனைவரும் செபிக்க வேண்டுமென்று நினைவுபடுத்துகிறேன்.

மலங்கரை சுறியானி கத்தோலிக்க திருச்சபையின் திருப்பணிகள் அனைத்தும் ஆயர் மாமன்ற பணிக்குழுக்கள் வாயிலாக ஒருங்கிணைக்கப்படுகின்றன. இப்பணியை உயர் பேராய கூரியா அல்லது காதோலிக்கேட் மையம் செய்து வருகிறது. இதன் செயல்பாடுகள் திருச்சபை மக்களின் உளமார்ந்த உதவிகளால் நடைபெற்று வருகிறது. காதோலிக்கா தினக் காணிக்கையை நாம் இதற்காக செலவிட்டு வருகிறோம். காதோலிக்கேட் மையம் ஒருங்கிணைக்கும் திருப்பணிகளுக்கும் திருச்சபயின் பொதுப்பணிகளுக்கும் உங்கள் உளமார்ந்த உதவிகளை வழங்கிட அறிவுறுத்துகிறேன்.

மதிப்பிற்குரிய பங்குத் தந்தையர்கள் இறைமக்கள் சமூகத்திற்கு முன்னதாகவே இதனை தெரிவித்து உற்சாகப்படுத்த வேண்டும். பங்குகள் மட்டுமல்ல நமது நிறுவனங்கள் துறவற சமூகங்கள் அனைவரும் இந்த முயற்சியில் மனதாரப் பங்கேற்க வேண்டும். இந்தியாவுக்கு வெளியேயுள்ள திருச்சபை சமூகங்களும் இத்திட்டத்தில் பங்கேற்க

வேண்டும். மறைமாவட்ட ஆயர்கள் தங்கள் மறைமாவட்டத்தில் வரும் காணிக்கைகளை சேமித்து ஆயர் மாமன்றத்தின் முடிவின்படி செலுத்த வேண்டிய தொகையை ஆயர் மாமன்ற கூடுகையில் சமர்ப்பிக்க வேண்டும். துறவற சமூகங்களின் தலைவர்களும், மாகாணத் தலைவர்களும் தங்கள் காணிக்கையை ஆயர் மாமன்றத்திற்கு முன் காதோலிக்கேட் மைய நிதி அலுவலகத்தில் ஒப்படைக்க வேண்டும். கடந்த ஆண்டில் இம்முயற்சியில் ஒத்துழைத்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

காதோலிக்கா தினத்தில் திருப்பலிக்குப் பின் நம் பங்குகளிலும் நிறுவனங்களிலும் மறைபணித்தளங்களிலும் காதோலிக்கா கொடி உயர்த்தி காதோலிக்கா தின உறுதிமொழியை எடுக்க வேண்டும். இந்த நாளில் உலகில் பல்வேறு பகுதிகளில் நம் திருச்சபையின் திருப்பணிகளில் ஈடுபட்டிருக்கும் அனைத்து மேதகு ஆயர்களையும், அன்பிற்குரிய குருக்களையும், இருபால் துறவிகளையும் இறைமக்கள் சமூகத்தையும் மனதாரப் பாராட்டி நன்றியுடன் நினைத்து இறைவேண்டல் செய்கிறேன்.

கடவுளின் கருணையும், ஆசீரும் நிறைவாக உங்கள் மேல் பொழியப்படுவதாக.

இவண்

இறைவனில் உங்கள் எளிய ஊழியன்

+Baselios cleemis

+ மோறான் மோர் பசேலியோஸ் கர்தினால் கிளீமிஸ்
உயர் பேராயர், மலங்கரை கத்தோலிக்கத்திருச்சபையின்
காதோலிக்கோஸ்

குறிப்பு: இந்த சுற்றறிக்கையை நமது ஆலயங்களிலும், மறைப்பரப்பு தளங்களிலும் திருப்பலியின் மத்தியில் வாசிக்கவும்.